DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS.No.97/2023**

| | | | |
|---|---|---|---|
| Name | : | பௌசியா | **Pw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of June 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 16 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 03.07.2012 ம் தேதிய வாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பாக விடுதலை ஆவணத்தை ரத்து செய்த ரத்துப் பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 03.07.2012 ம் தேதிய வாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பாக விடுதலை ஆவணத்தை ரத்து செய்த ரத்துப் பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். 03.07.2012 ம் தேதிய வாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பாக விடுதலை ஆவணத்தை ரத்து செய்த ரத்துப் பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 07.06.2012 ம் தேதி வாதியிடம் 1ம் பிரதிவாதி ஏமாற்றி எழுதி வாங்கிய பாக விடுதலை ஆவணம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 07.06.2012 ம் தேதி வாதியிடம் 2ம் பிரதிவாதி ஏமாற்றி எழுதி

வாங்கிய பாக விடுதலை ஆவணம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 07.06.2012ம் தேதி வாதியிடம் 3ம் பிரதிவாதி ஏமாற்றி எழுதி வாங்கிய பாக விடுதலை ஆவணம் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 07.07.2012ம் தேதி வாதி வழக்கறிஞர் மூலம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு வழக்கறிஞர் அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆகும். 1 முதல் 3 பிரதிவாதிகள் அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திரும் வந்த கவர் **வா.சா.ஆ.8** ஆகும். வாதியின் தாயாரின் இறப்பு சான்றிதழ் கடையநல்லூர் நகராட்சியில் பெற்றது அசல் **வா.சா.ஆ.9** ஆகும். வாதியின் தாயார் இறப்பு சான்றிதழ் கடையநல்லூர் காதர் முஹையதீன் குத்பா பள்ளிவாசல் முஸ்லிம் ஜமாஅத்லிருந்து பெற்றது அசல் **வா.சா.ஆ.10** ஆகும். பிராது தபசில் சொத்திற்குரிய Extract from the Town Survey land register – Online மூலம் பெறப்பட்டது **வா.சா.ஆ.11** ஆகும். பிராது தபசில் சொத்திற்குரிய Field Measurement Plan – Online மூலம் பெறப்பட்டது **வா.சா.ஆ.12** ஆகும். பிராது தபசில் சொத்தில் வாதியின் தாயார் பெயரில் இருந்து Gas Cylinder இணைப்பு பெற்றதற்கான ரசீது அசல் **வா.சா.ஆ.13** ஆகும். பிராது தபசில் சொத்தில் பிரதிவாதிகளுடன் வாதியின் தாயார் குடியிருந்து வந்து வாக்காளர் அடையாள அட்டை பெற்றதற்கான வாக்காளர் வரைவுப்பட்டியல் கணினி வழியில் பெறப்பட்டது **வா.சா.ஆ.14** ஆகும். 28.05.1943ம் தேதியில் பிராது தபசில் சொத்தினை வாதியின் தகப்பனாரின் தந்தையான சாகுல்ஹமீது கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.15** ஆகும். பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர், தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கொடுத்த ஆட்சேபனை கடிதம் அசல் (3 அஞ்சல ரசீதுகளுடன்) **வா.சா.ஆ.16** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**